செய்தி வெளியீடு எண்: 474 நாள் : 01.10.2015

## தமிழ்ச் சாலை பெயர் மாற்றத்திற்கு தமிழ் அமைப்புகள் நன்றி!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி சென்னை, எழும்பூரில் தமிழ் வளர்ச்சித் துறை, கலைப் பண்பாட்டுத் துறை, தொல்லியல் துறை ஆகிய அலுவலகங்கள் அடங்கிய தமிழ் வளர்ச்சி வளாகம் அமைந்துள்ள ஆல்சு சாலைக்கு 'தமிழ்ச் சாலை' என பெயர் சூட்டப்படும் என தமிழ் வளர்ச்சித் துறைக்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் **'தமிழ்ச் சாலை'** பெயர்ப் பலகை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது. இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சென்னை தென்னகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர், கவிதை உறவு இதழாசிரியர் ஏர்வாடி சு. இராதாகிருஷ்ணன், கவிஞர் சினேகன், உலகத் தமிழ் மையம், பிரான்சு தமிழ்ச் சங்கம், தமிழகத் தமிழ்க் கவிஞர் மன்றம், விழுப்புரம் இலக்கிய வட்டம், தஞ்சாவூர், தமிழ்த்தாய் அறக்கட்டளை , காஞ்சிபுரம் மாவட்டம் ஊரப்பாக்கம் தமிழ்ச் சங்கம், காஞ்சிபுரம் மாவட்டம் பேரறிஞர் அண்ணா தமிழ் வளர்ச்சி மன்றம், சென்னை தமிழ்க்கூடல், செஞ்சி குறிஞ்சி வட்டம், சென்னை திண்ணை வெளியீடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மாணவர்கள் முதலிய பல்வேறு தமிழ் அமைப்பினர், தமிழறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் இன்று (01.10.2015) காலை 11.00 மணியளவில் சென்னை எழும்பூர் தமிழ்ச் சாலைக்கு வருகைதந்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

மேலும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கென கடந்த நான்காண்டுகளில் பல்வேறு திட்டங்களை அறிவித்தும் பல கோடி ரூபாயை திட்டச் செயல்பாட்டுக்கு ஒதுக்கீடு செய்தும், தமிழறிஞர்களைச் சிறப்பிக்கும் வகையில் '**அம்மா இலக்கிய விருது**' உள்ளிட்ட பல்வேறு விருதுகளை அறிவித்து வழங்கி வருவதற்கும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கிவந்த உதவித்தொகை ரூ.1000/–த்தை ரூ.2000/–ஆக உயர்த்தியும் மருத்துவப்படி ரூ.100/– மற்றும் கட்டணமில்லாப் பேருந்து பயணச்சலுகையை வழங்கியதற்கும், தற்போது பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 125ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரின் பிறந்தநாள் ஆண்டுதோறும் '**தமிழ்க் கவிஞர் நாள்**' என கொண்டாடப்படும் என அறிவித்ததற்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்தனர்.

இதேபோல், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களுக்கு தமிழ்க் கல்விக் கலைகளுக்கான மையம் ஆக்ஸ்போர்டு, இலண்டன் தமிழ் அவை, நோர்வோக் தமிழ்ச் சங்கம் – ஐக்கிய இராஜ்ஜியம், உலகத் திருக்குறள் திருமுறைப் பேரவை, தமிழ் மற்றும் நுண் கலைகளுக்கான இலண்டன் மையம், தமிழ் சைவக் கலாச்சார மையம் – கரோ, இலண்டன், அடிலெய்டு தமிழ்ச் சங்கம் – ஆசுதிரேலியா, சிலாங்கூர் தமிழ்ச் சங்கம் – மலேசியா உள்ளிட்ட பல்வேறு அயலகத் தமிழ் அமைப்பினரும் நன்றி தெரிவித்தனர்.

இவ்வாறு நடைபெறும் நிகழ்ச்சியை அறிந்த மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு கே.சி. வீரமணி அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு வருகைதந்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்த தமிழறிஞர்களிடமும், தமிழ் அமைப்பினரிடமும் உரையாற்றினார். அவர்தம் உரையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழறிஞர்களுக்கும் அளித்த பல்வேறு திட்டங்களை எடுத்துரைத்து, அகிலத்தில் மாபெரும் புரட்சி செய்த மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டப்பேரவை விதி 110ன் கீழ் தமிழ் மொழிக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் அறிவித்த திட்டங்களைக் கூறியும்

பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர்!

என்ற பாரதியின் அமுத மொழிக்கேற்ப பெண் எழுத்தாளர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் மகளிர் இலக்கியங்களைப் படைத்திடும் பெண் படைப்பாளர் ஒருவருக்கு ‘அம்மா இலக்கிய விருது’ வழங்கிட ஆணையிட்டதை எடுத்துரைத்து, தமிழின மாதரசியாக அம்மா அவர்கள் உயர்ந்து நிற்கின்றார் எனத் தம் உரையில் குறிப்பிட்டார். மேலும், பாவேந்தர் பாரதிதாசன் 125ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் அவரது பிறந்த நாளை ஆண்டுதோறும் ‘தமிழ்க் கவிஞர் நாள்’ என அறிவித்ததையும் உலகத் தமிழ்ச் சங்க விருதுகள், ஆத்திசூடியை சீனம், அரபு மொழிகளில் வெளியிட அம்மா அவர்கள் ஆணையிட்டதையும் எடுத்துரைத்து மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழ் வளருகிறது. தமிழால் உலகத் தமிழர்கள் மகிழ்கின்றனர். தமிழ் ஊரும் தமிழ்ச் சீரும் அம்மாவின் பேரைச் சொல்லியே இனி வாழும், வளரும் என்பதை இதன் வாயிலாக நாட்டிற்கு உரைக்கின்றோம் எனக் கூறியும் வருகைதந்த அனைத்து தமிழறிஞர்களுக்கும் தமிழ் அமைப்புகளுக்கும்

நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்ட அயல்நாட்டில் செயல்படும் உலகத் தமிழ் அமைப்புகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வருகை தந்த பெருந்திரளான தமிழறிஞர்களுக்கும் தமிழ் அமைப்புகளுக்கும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மாணவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சியின் முடிவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா. மு. சேகர் வருகைதந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் தொல்லியல் துறை ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன் இ.ஆ.ப., உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், உலகத் தமிழ்ச் சங்கத்தின் தனி அலுவலர், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர், உதவி இயக்குநர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**